*4*

# புதிய ஏற்பாட்டில் பெண்கள்

*சிலுவைக்குப்பின்பு, பச்சிளங்குழந்தைப் பருவத்தில் இருந்த சபையில் மாபெரும் பெண்களை நாம் கண்டறிகின்றோம். இயேசுவின் மரணத்தில் (எபிரெயர் 9:16, 17) தொடங்கப்பட்ட புது யுகமானது - கிறிஸ்தவ யுக மானது - இயேசுவின் உயிரற்ற உடலுக்கு மரியாதைசெலுத்தத் தங்களால் இயன்றவற்றைச் செய்துகொண்டிருப்பதில் மும்முரமாயிருந்த பெண்களைக் கொண்டு தொடங்குகிறது, அதே வேளையில் அவரைப் பின்பற்றிய ஆண்கள் தங்கள் உயிருக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருந்தனர்.*

> *கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து.*
>
> *திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந் தார்கள்.*
>
> *வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள் (லூக்கா 23:55-24:1).*

## பெண்களும் உயிர்த்தெழுதலும்

*யுதத்தலைவர்களின் கோபம், இயேசுவைப் பின்பற்றிய பெண்களை அச்சுறுத்தவில்லை. சிலுவையில் இயேசு வேதனையில் துடித்தபோதும், அவரது உடலில் இருந்து அவரது உயிர் வெளியேறியபோதும், பெண்கள் அதைக்கவனித்துக்கொண்டிருந்தனர் (மத்தேயு 27:55, 56; மாற்கு 15:40, 41). அவரது ஆண் சீஷர்களல்ல, ஆனால் பெண்களே, அரிமத்தியாவூர் யோசேப்பையும் நிக்கொதேமுவையும் பின்பற்றிச் சென்று, அவர்கள் இயேசுவை அடக்கம் செய்ததைக் கவனித்திருந்தனர் (லூக்கா 23:55). பின்பு அந்தப் பெண்கள், அவரது உடலுக்குக் கந்தவர்க்கங்களையும் பரிமளத்தைலங்களையும் ஆயத்தம் பண்ணுவதற்காக எருசலேமுக்குத் திரும்பி வந்தனர் (லூக்கா 23:56).*

*ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில், ஒருவேளை, ஆண்கள் இன்னும் படுக்கையிலிருந்த வேளையில், பெண்கள், தாங்கள் அன்புடன் தயார் செய்திருந்த பரிமளவர்க்கங்களைக்கொண்டு இயேசுவின் உடலை அபிஷேகிப்பதற்காக அவற்றை எடுத்துக்கொண்டு கல்லறைக்குச் சென்றனர் (மத்தேயு 28:1). அவர்கள் அனேகமாக, கல்லறையைக் காவல்*

*செய்திருந்த வீரர்களைத் தாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்குமே என்று நினைத்திருக்கலாம், ஆனால் என்ன நடக்கும் என்று அறியாத நிலையில் அவர்கள், கல்லறையை தைரியத்துடன் அணுகினர். போர்வீரர்கள் அங்கிராததும், கல்லறையின் கல் புரட்டப்பட்டுக்கிடந்ததும், கல்லறை வெறுமையாய் இருந்ததும் அவர்களுக்குத் திகைப்பை ஏற்படுத்தின (லூக்கா 24:1-3).*

*இயேசு உயிர்த்தெழுந்தபின்பு முதலாவதாக அவர், ஆண்களுக்கல்ல ஆனால் முன்பு பாவம் நிறைந்தவளாய் இருந்த மகதலேனா மரியாளுக்கே தரிசனமானார் (யோவான் 20:11-18). அவரது உயிரித்தெழுதல் பற்றி முதன்முதலாகப் பெண்களே அறிவித்தனர் (லூக்கா 24:9). இருப்பினும், அவர்கள் இந்தச்செய்தியுடன் பொதுஜனங்களை முதலில் அணுகவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். கும்பலில் இருந்தும் சமூகக்கூடுகைகளில் இருந்தும் தூரம் சென்று, ஒளிந்துகொண்டிருந்த பதினொருவரை அவர்கள் கண்டறிந்து, அவர்களிடத்தில் இயேசுவின் உயிர்தெழுதலைப் பற்றிக்கூறினர் என்பது தெளிவு. உயிர்த்தெழுதலின் செய்தியைப் பொதுஜனங்களுக்கு முதன் முதலில் பகிர்ந்துகொண்டவர் பேதுருதான், இதை அவர் பெந்தெகொஸ்தே நாளன்று செய்தார் (நடபடிகள் 2:29-32; லூக்கா 24:44-47ஐக் காணவும்). இருந்தபோதிலும், இந்த மாபெரும் நிகழ்ச்சியை முதன்முதல் கூறுபவர்களாய் இருக்கும் ஆசீர்வாதமானது, இயேசுவின் சொந்த ஊழியத்தின்போது அவருக்கு அன்புடன் சேவை செய்திருந்த பெண்களுக்கே தரப்பட்டது.*

*இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற நற்செய்தியானது நாம் பின்பற்றுகின்ற வகையில் முன்கருத்துக்களாக உலகத்திற்குப் பெண்களுடைய ஊழியத்தினால் அல்ல, ஆனால் ஆண்களுடைய ஊழியத்தினாலேயே அறிவிக்கப்பட்டது என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கருத்தைப் பின்பற்றுதல் என்பது வெளிப்பாடு, அறிவித்தல் மற்றும் அவரது வார்த்தையை பாதுகாத்தல் என்ற பாதையைப் பின்பற்றுகிறது. புதிய ஏற்பாட்டில் பெண்கள் பற்றிய வார்த்தைகள் உள்ளன, ஆனால் அதில், பொதுகூட்டங்களில் பெண்களால் அறிவிக்கப்பட்டதாகவோ அல்லது அவர்களால் எழுதப்பட்டதாகவோ ஒருவார்த்தைகூட இருப்பதில்லை. இயேசு தமது அப்போஸ்தலர்களாய், தமது தனிப்பட்ட பிரதிநிதிகளாய் இருக்கும்படி ஆண்களைத் தான் தேர்ந்துகொண்டார். அவர்கள், ஏவுதல் பெற்ற மற்ற ஆண்களுடன் புதிய ஏற்பாட்டை எழுதினர். இந்த எழுத்துக்களில் உள்ள சத்தியத்தின் அடிப்படையில்தான் சபை கட்டியெழுப்பப்பட்டுள்ளது (எபேசியர் 2:20). சுவிசேஷம் பரவுதல் என்பது, இயேசுவின் மரணத்தினால் சாத்தியமாக்கப் பட்டுள்ள இரட்சிப்பின் செய்தியை வெளிப்படையாக அறிவிப்பதற்கு உலகமெங்கும் சென்ற ஆண்களின் வரலாறாகவே உள்ளது. இது, பெண்கள் போதிக்கவில்லை என்று கூறுவதாக இருப்பதில்லை, ஆனால் பதிவுசெய்யப் பட்டுள்ளவற்றில் இருந்து நாம், வசனத்தை வெளிப்படையாக அறிவித்தல் யாவும் ஆண்களாலேயே செய்யப்பட்டன என்று முடிவுசெய்தாக வேண்டும் என்று கூறுதலாகவே உள்ளது.*

பழைய ஏற்பாட்டில் உள்ளது போன்றே, புதிய ஏற்பாட்டிலும், மக்களின் அமைப்பு ஒன்றின் அளவைக் கணக்கிடுவதற்கு, அதிலிருக்கும் ஆண்களை மாத்திரம் உள்ளடக்குதல் என்பதே புதிய ஏற்பாட்டின் பெரும்பான்மையான நிகழ்ச்சிகளிலும் வழக்கமாயிருக்கிறது (மத்தேயு 14:21; 15:38; நடபடிகள் 4:4). பந்தி விசாரணை செய்வதற்கு மக்கள் தேவைப்பட்டபோது, அந்தப்பொறுப்பு ஆண்களுக்கே தரப்பட்டது (நடபடிகள் 6:3). புறஜாதியாருக்கு இரட்சிப்பின் கதவுகள் கொர்னேலியு என்ற ஆண்மூலமாகவே திறக்கப்பட்டது (நடபடிகள் 10; 11). அந்தியோகியாவில் இருந்த சபையின் தீர்க்கதரிசிகளும் போதகர்களும் ஆண்களாகவே இருந்தனர்; அவர்களின் மூலமாகவே ஆவியானவர், ஊழியத்திற்கென்று பவுலும் பர்னபாவும் செல்ல வேண்டும் என்று வெளிப்படுத்தினார் (நடபடிகள் 13:1, 2).

## பெண்களும் சபையின் ஊழியமும்

பெண்கள் சபையின் ஊழியத்தில் சேர்க்கப்படாமல் விட்டுவிடப்பட்டதில்லை. தொற்காள் கர்த்தருக்கென்று மாபெரும் ஊழியக்காரியாக இருந்தாள், இவள் விதவைகளுக்கு உடைகள் தருவதற்காகத் தான் கொண்டிருந்த தையற்கலைத் திறமையைப் பயன்படுத்தினாள் (நடபடிகள் 9:39). யோவான் மாற்குவின் தாயாகிய மரியாள், ஜெபத்திற்கு மக்கள் கூடும் இடமாகச் தனது வீட்டை அளித்திருந்தாள் (நடபடிகள் 12:12). ஜெபங்களில் யார் ஈடுபட்டிருந்தனர் என்றோ அல்லது ஜெபம் எவ்வாறு நடத்தப்பட்டது என்றோ விபரங்கள் தரப்படவில்லை. வர்த்தகம் செய்துவந்த தேவபக்தியுள்ள பெண்ணாகிய லீதியாள் என்பவள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தாள், இவள் பவுலும் அவரது உடன் ஊழியர்களும் பிலிப்பி நகரத்தில் இருந்தபோது அவர்கள் தங்கியிருப்பதற்குத் தனது வீட்டைத் திறந்துகொடுத்து உபசரிப்பின் ஆவியைக் காண்பித்தாள் (நடபடிகள் 16:15). ஒருவேளை அந்தவீடானது சபைகூடிவரும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (நடபடிகள் 16:40).

## பெண்களும் பிறருக்குப் போதித்தலும்

பிரிஸ்கில்லாள் என்ற தேவபக்தியுள்ள பெண்ணைப் பற்றிய விஷயம் விசேஷித்த ஆர்வத்திற்குரியதாயிருக்கிறது. அவளும் அவளது கணவர் ஆக்கில்லாவும் கூடாரம் செய்பவர்களாய் இருந்தனர் (நடபடிகள் 18:2, 3). அவர்கள் ஒன்றாயிணைந்து அப்பொல்லோவுக்குக் கர்த்தருடைய வழியை அதிக முழுமையாக அறிவுறுத்தினர் (நடபடிகள் 18:24-26). இதில் பிரிஸ்கில்லாள் எந்த அளவுக்கு ஈடுபட்டிருந்தாள் என்று நாம் நிச்சயமாகக் கூற இயலாது, ஆனால் அவள் தனது கணவருடன் இணைந்து அப்பொல்லோவுக்குப் போதித்ததாக நமக்குக் கூறப்பட்டுள்ளது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் மற்ற விஷயங்களைக் கண்ணோக்குவதன் மூலம் தாம் இதை முடிவுசெய்ய இயலும். லூக்கா

பொதுவாக முதலில் ஒரு கணவரையும் பின்பு தாம் வலியுறுத்திக்கூற விரும்பியவர்கள், நன்கு அறியப்பட்டவர்கள், அல்லது செயலில் அதிகம் முழுமையாக இருந்தவர்கள் ஆகியோரின் பெயர்களையும் பட்டியலிட்டார். பின்வருபவற்றைக் கவனியுங்கள்: (1) அப்போஸ்தலர் களின் பட்டியலில் பேதுருவின் பெயர் முதலாவதாகக் காணப்படுகிறது, மற்றவர்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து அவர்களின் பெயர்கள் இறங்குவரிசையில் பின்பு குறிப்பிடப்படுகிறது (நடபடிகள் 1:13). (2) அந்த வேளையில் முக்கிய ஆர்வத்திற்குரிய செயல்பாட்டைக் கொண்டிருந்த பேதுரு, நடபடிகள் 3:1, 3, 4, 11 ஆகிய வசனங்களில் யோவானுக்கு முன்பாகப் பட்டியலிடப்பட்டுள்ளார். லூக்காவின் விபரத்தில் அவர் (பேதுரு) தொடர்ந்து குறிப்பிடப்பட வேண்டியவராக இருக்கின்றார் (நடபடிகள் 4:13; 5:29; 8:14). (3) அனனியா என்ற கணவர் தமது மனைவி யான சப்பீராளுக்கு முன்பாகப் பட்டியலிடப்பட்டார் (நடபடிகள் 5:1). (4) நடபடிகள் 6:5ல், லூக்காவினுடைய கலந்துரையாடலில் அடுத்து கவனம் செலுத்தப்படவிருந்த ஸ்தேவான் முதலாவதாகப் பட்டியலிடப்பட்டார்; அடுத்ததாகப் பிலிப்புவும், பின்பு விதவைகளுக்குப் பந்தி விசாரணை செய்வதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட மற்றவர்களும் குறிப்பிடப்படுகின்றனர். (5) பர்னபா மற்றும் பவுல் ஆகியோரின் ஊழியப் பயணம் தொடங்கிய வேளையில், பர்னபா முக்கியத்துவம் வாய்ந்தவராயிருந்தார்; அவர் நடபடிகள் 13:1, 2, 7 ஆகிய வசனங்களில் பவுலுக்கு முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். பிற்பாடு பவுல் முக்கிய பேச்சாளரானார் என்று நாம் அறிகின்றோம்; எனவே அவர் பெயர் முதலாவதாகப் பட்டியலிடப்படுகிறது (நடபடிகள் 13:42, 46, 50). பர்னபா முதன்மைத் தெய்வமான ஜீயஸாக இருந்தார் என்று லீஸ்திராவில் இருந்த மக்கள் முடிவுசெய்தபோது, அவரது பெயர் மீண்டும் முதலாவதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது (நடபடிகள் 14:12, 14). பவுலைப் பர்னபாவுடன் எருசலேமுக்கு அனுப்புவதென்று சகோதரர்கள் தீர்மானித்தபோது, அவரது பெயர் நடபடிகள் 15:2ல் முதலாவதாக பட்டியலிடப்படுகிறது. அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில், அவர்களுக்குப் பவுலைக் காட்டிலும் அதிகம் நன்கறியப்பட்டிருந்த பர்னபாவின் பெயரை முதலாவதாகக் காணுகின்றோம் (நடபடிகள் 15:12, 25). காலம் கடந்தபோது, பர்னபாவுடனான ஊழியப்பணியில், பவுல் பேச்சாளர் என்று அங்கீகரிக்கப்பட்டார். நடபடிகள் 15:22, 35ல் அவர் முதலாவதாகப் பட்டியலிடப்பட்டுள்ளார். (6) பவுல் எப்போதுமே சீலாவுக்கு முன்பாக குறிப்பிடப்பட்டுள்ளார் (நடபடிகள் 16:19, 25, 29; 17:4, 10). (7) சீலா எப்போதுமே, இளையவராயிருந்த தீமோத்தேயுவுக்கு முன்னதாகவே குறிப்பிடப்பட்டுள்ளார் (நடபடிகள் 17:14, 15; 18:5).

நாம், மேற்கண்ட உண்மைகளைத் தர அளவையாகப் பயன்படுத்தக் கூடுமென்றால், ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் ஆகியோரின் செயல்பாட்டைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு அடிப்படை ஒன்றைக் கொண்டுள்ளோம் என்றாகிறது. இவர்களை அறிமுகப்படுத்தும் வேளையில், லூக்கா ஆக்கில்லாவின் பெயரை முதலில் கூறினார், இது அவர் (ஆக்கில்லா)

ஒரு ஆணாகவும் கணவராகவும் இருந்தார் என்பதால் இயல்பானதாக இருந்தது (நடபடிகள் 18:2), பிற்பாடு பிரிஸ்கில்லாளின் பெயர் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பது (நடபடிகள் 18:18), அங்கிருந்த சபையில் அவள் தனது கணவரைக் காட்டிலும் அதிகமாய் அறியப்பட்டிருந்தாள் என்ற கருத்தைத் தெரிவிப்பதாயிருக்கலாம். இன்றைய நாட்களில் சபையில், கிறிஸ்தவப் பெண்கள் தங்களின் கணவர்களைக் காட்டிலும் அதிகம் தனிச்சிறப்புடன் நிலைநிற்கின்றனர். போதிக்கிற சூழ்நிலையில், பிரிஸ்கில்லாள் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றாள் என்ற உண்மை யானது[1] (நடபடிகள் 18:26), அவள் அப்பொல்லோவுக்குப் போதிப்பதில் மறைமுகமாக அல்ல ஆனால் நேரடியாகவே ஈடுபட்டிருந்தாள் என்று சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படலாம். அவள் கலந்துரையாடலில் ஆதிக்கம் செலுத்தினாள் என்று நாம் முடிவுசெய்யக் கூடாது, ஆனால் அவள் தனிச்சிறப்பான பணிப்பொறுப்பை கொண்டிருந்தாள் என்று நாம் நம்புவதற்குக் காரணம் கொண்டுள்ளோம். குறைந்தபட்சம், அவள் போதனையில் ஈடுபட்டிருந்தாள் என்று நாம் அறிகின்றோம், ஏனெனில் நடபடிகள் 18:26, "ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" என்று உரைக்கிறது. இந்நிகழ்ச்சியில், "சேர்த்துக்கொண்டு" மற்றும் "விவரித்துக் காண்பித்தார்கள்" என்ற கிரேக்க வினைச்சொற்கள் பன்மைத் தன்மை கொண்டுள்ளன, இது அவ்விருவரும் செயல்பட்டனர் என்று அர்த்தப்படுகிறது.

பிரிஸ்கில்லாள் வசனத்தை வெளியரங்கமாக அறிவிக்கவில்லை, ஆண்கள்மீது ஆதிக்கம் செலுத்தவில்லை, கலந்துரையாடலை மேற்கொள்ள வில்லை, அல்லது இந்தச் சூழ்நிலையில் நடத்துனராகவில்லை. அவள் அப்பொல்லோவுக்குத் தனிப்பட்ட முறையில் தேவனுடைய வசனத்தைப் போதிப்பதில் தனது பங்கைச் செய்தாள் என்று வெளிப்படுத்துவதற்கு லூக்கா விரும்பியிருக்க வேண்டும் (நடபடிகள் 18:26). அப்பொல் லோவுக்கு வேதவசனங்களை விளக்குவதில் பிரிஸ்கில்லாள் நடத்துவத்தை மேற்கொண்டாள் என்று ஒருவர் காண்பிக்க முடிந்தாலும், இது வெளியரங்கமான ஆராதனையில் பெண்கள் நடத்துவத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்காது. இந்த நிகழ்ச்சியானது தனிப்பட்ட முறையில் நடந்ததாக விவரிக்கப்படுகிறது.

## பெண்களும் மற்றவர்களை ஆதரித்தலும்

இயேசுவின் தனிப்பட்ட ஊழியத்தின்போது அவருக்கும் அவரது அப்போஸ்தலர்களுக்கும் பணிசெய்திருந்த பெண்களின் பட்டியல் ஒன்றை புதிய ஏற்பாடு பதிவுசெய்துள்ளது (லூக்கா 8:1-3; மாற்கு 15:40, 41). இயேசு, பெண்களைப் போதிக்கும்படி அனுப்பவில்லை அல்லது தம்முடனும் அப்போஸ்தலர்களுடனும் போதிக்கும்படி அவர்களை அனுமதிக்கவில்லை என்றாலும், இயேசு பெண்கள் பற்றி ஒருதலைப்பட்சமாக இருந்தார் என்று எவரொருவரும் அவர்மீது குற்றம் சாட்ட இயலாது என்பது செயலளவில்

உண்மையாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், இயேசுவுக்கென்று பவுல் செய்த ஊழியத்தில் அவருடன் எண்ணற்ற பெண்கள் ஊழியம் செய்திருந்தாலும், பலர் பவுலை, பெண்களை வெறுப்பவர் என்றோ அல்லது பெண்களுக்கெதிராக ஒருதலைப்பட்சமாக இருப்பவர் என்றோ தாக்கியுள்ளனர்.

பர்னபா மற்றும் யோவான் (நடபடிகள் 13:2-5), சீலா (நடபடிகள் 15:40), தீமோத்தேயு (நடபடிகள் 16:1-3), ஆக்கில்லா (நடபடிகள் 18:18), எரஸ்து (நடபடிகள் 19:22), சோபத்தர், அரிஸ்தர்க்கு, செக்குந்து, காயு, தீகிக்கு, மற்றும் துரோப்பீமு (நடபடிகள் 20:4) ஆகியோர் உட்பட, பவுலின் பயணக்கூட்டாளிகளாக லூக்கா பெயர்கூறிக் குறிப்பிடப்பட்டிருந்த ஏறக்குறைய எல்லாருமே ஆண்களாகவே இருந்தனர். இந்த ஆண்களின் பட்டியலில் ஒரே விதிவிலக்கு பிரிஸ்கில்லாள் (நடபடிகள் 18:18) மாத்திரமே. லூக்கா எழுதியதை மாத்திரம் நாம் கருத்தில் கொண்டால், பவுல் தம்முடன் ஆண்களை மாத்திரமே அழைத்துச் சென்றார், மற்றும் பிரிஸ்கில்லாள் தனது கணவருடன் இருந்தாள் என்பதால் அவளைமாத்திரம் தங்களுடன் செல்ல அனுமதித்தார் என்றே நாம் யூகிக்கக்கூடும்.

இருப்பினும், பவுலின் எழுத்துக்களை ஆழ்ந்து பரிசோதித்தலானது, அவரது ஊழியப்பயணங்களின்போது, பெண்கள் அவருக்கு உதவிசெய்திருந்தனர் என்றும் அவருடன் பயணித்திருந்தனர் என்றும் வெளிப்படுத்தும். அவர்கள் அவருக்கு எவ்வகையில் உதவினர் என்பதை நாம் யூகம் செய்யமாத்திரம் முடியும். நாம் அவ்வாறு யூகிப்பதில், அவர்கள் பவுலின் போதனைகளுக்கு முரண்பாடான செயல்களில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள் என்று நாம் கற்பிதம் செய்ய வேண்டும்.

ஆக்கில்லாவுடன் சேர்ந்து பிரிஸ்கில்லாளும் பவுலுக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்தாள் (ரோமர் 16:4). மரியாள் (ரோமர் 16:6), யூனியா (ரோமர் 16:7; இது பெண்ணா அல்லவா என்று சிலர் கேள்வியெழுப்புகின்றனர்), திரபேனாள், திரிபோசாள், பெர்சியாள் (ரோமர் 16:12), யூலியாள் (ரோமர் 16:15), நேரேயின் சகோதரி (ரோமர் 16:15) மற்றும் ரோமாபுரியில் வாழ்ந்திருந்த பிறபெண்கள் ஆகியோர் பவுலுடன் ஊழியத்தில் உழைத்திருந்திருக்கலாம். எயோதியாள் மற்றும் சிந்திக்கேயாள் உட்பட, இயேசுவுக்குப் பணிசெய்வதில் பவுலுக்கிருந்த போராட்டத்தை அவரோடு பகிர்ந்து கொண்டிருந்த பெண்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார் (பிலிப்பியர் 4:2, 3). நிம்பா என்பவள் (இது சில கையெழுத்துப் பிரதிகளில் நிம்பஸ் என்ற ஆண்பால், பெயர் வடிவில் உள்ளது; தமிழ் வேதாகமத்தில் "... நிம்பாவையும், அவன் வீட்டில் கூடிவருகிற ..." என்றுள்ளது) சபைகூடிவருவதற்குத் தன்வீட்டை அளித்தவன் என்று பவுல் குறிப்பிட்டார் (கொலோசெயர் 4:15).

சிலர் உறுதியாய்க் கூறுகிறபடி, பவுல் பெண்களை வெறுப்பவராய் இருந்திருந்தால், அவர்களைக் குறித்து அவர் தமது அற்பமான எண்ணப்போக்கைப் புறம்பே எடுத்துப்போட்டு, கர்த்தருக்கு ஊழியம் செய்தவேளையில் அவர்களுடன் அவர் இணைந்து செயல்பட்டார். அவர்களுக்குத் தனிப்பட்ட வாழ்த்துதலை அனுப்பும் அளவுக்கு அவர்

போதிய அளவு ஆழமான அன்புடன் அவர்களைப் பற்றி நினைத்தார். பெண்களுக்குக் கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட ஊழியத்தின் வீதிகளில் இருந்து அவர்களை விலக்க விரும்பும் ஒருவருக்கு அவரை உதாரணமாகப் பயன்படுத்த முடியாது.

கிறிஸ்துவினிமித்தம் பவுலுடன் ஊழியம் செய்திருந்த பெண்கள், தைரியமும் பலமும் வாய்ந்த பெண்களாயிருந்தனர். அவர்கள் சுவிசேஷத்தைப் பரப்புவதில் பவுலுடன் இணைந்து ஊழியம் செய்திருந்தனர். இது உண்மையாக இருந்தபோதிலும், சபையின் ஊழியத்திலும் ஆராதனையிலும் பெண்கள், ஆண்கள் மீது அதிகாரத்துவம் கொண்டிருந்தனர் என்ற முடிவு தரவழைக்கப்படக் கூடாது.

## முடிவுரை

புதிய ஏற்பாட்டு சபையில் தேவபக்தியுள்ள பெண்கள் பலவழிகளில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாயிருந்தனர். இன்றைய நாட்களில் பெண்கள் தங்கள் குடும்பங்களின் மற்றும் பிறரின் தேவைகளைச் சந்திக்கின்றபோது அவர்கள் தேவனுக்கு மதிப்புமிக்க ஊழியக்காரிகளாய் இருக்கின்றனர். அவர்கள் சரியான வேளைகளிலும் சரியான இடங்களிலும் தேவனுடைய வசனத்தைப் போதிக்க முடியும், ஆனால் ஆண்கள் மீது அதிகாரத்துவம் பெண்களுக்குத் தரப்படவில்லை. குடும்பத்திலும் மத விஷயங்களிலும் நடத்துவத்துவம் என்பது எப்போதும் ஆண்களுக்கே நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேவன் பெண்களின் பணிப்பொறுப்புக்களுக்கும் ஆண்களின் பணிப்பொறுப்புக்களுக்கும் வித்தியாசத்தைப் பராமரித்துள்ளார்.

---

குறிப்பு

[1]ஆக்கில்லாவை முதலாவதாக குறிப்பிடும் KJV மற்றும் தமிழ் வேதாகமம் கிரேக்க வசனத்தைப் பின்பற்றுவதில்லை.

## பெபேயாள் ஒரு உதவிக்காரியாக இருந்தாளா?

பவுல் வாழ்த்துக்களை அனுப்பியிருந்த பெபேயாள், ஒரு வேலைக்காரி, ஊழியக்காரி, அல்லது உதவிக்காரி என்று அழைக்கப்பட்டாள் என்ற உண்மை குறித்து (ரோமர் 16:1, 2). சில வட்டாரங்களில் மிக அதிகமான கற்பனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிலர் இந்தக் குறிப்பை, தொடக்ககால சபையில் பெண்களுக்கு நடத்துவத்துவப் பதவிகள் தரப்பட்டிருந்ததற்கான ஆதாரம் என்ற வகையில் பயன்படுத்துகின்றனர். இந்தக்கூற்றின்மீது கட்டியெழுப்பப்படும் ஒரு விவாதமானது குறைந்தபட்சமாகக் கூறுவதென்றாலும், ஆடக்கூடியதாக உள்ளது. தொடக்ககால சபையில் அப்படிப்பட்டதொரு பணிநிலை இருந்தது என்றால், “உதவிக்காரி” என்ற பணிநிலை மாத்திரமே தகுதி எதுவும் குறிப்பிடப்படாமல் வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பணிநிலையாக இருக்கும். பெபேயாள் அப்படிப்

பட்டதொரு நிலையில் ஊழியம் செய்திருந்தால், இது அவள் ஆண்கள் மீது அதிகாரத்துவம் கொண்டிருந்தாள் என்று நிரூபிக்கிறதா?

பெபேயாள் என்னவிதமான ஊழியம் செய்தாள் என்று ரோமர் 16 குறிப்பிடுவதில்லை. அவள் தொற்காளைப் போல் உடைகள் தைத்துக் கொடுத்தாளா? அல்லது அவள் சபைக்குழுமங்களுக்குப் பிரசங்கித்தாளா? அவள் நிம்பாவைப் (இது பெண் என்று கருதப்பட்டால்)போல் தனது இல்லத்தில் சபைகூடி வர அனுமதித்திருந்தாளா? அவள் பிரிஸ்கில் லாளைப் போல் தனது கணவருடன் சேர்ந்து உழைத்தாளா? அல்லது அவள் பாடலில் நடத்துனளாயிருந்தாளா? அவள் பெண்களுக்கான வகுப்பில் போதித்தாளா, அல்லது அவள் ஆண்களுக்குப் போதிக்க முடிந்திருந்ததா? அவள் சபைக்குழுமத்தில் தேவையில் இருந்தவர்களுக்கு உணவு தயாரித்தளித்தாளா, அல்லது எருசலேமில் ஏழு ஆண்கள் செய்ததுபோல், ஏழைகளுக்கு உணவு வழங்கப்படுதலை மேற் பார்வையிட்டாளா? ஆண்கள்மீது அதிகாரம் செலுத்தக்கூடிய ஏதாவது வழியில் அவள் ஊழியம் செய்தாளா? அவளது ஊழியத்திற்கான அளவீட்டுக் கோல்களை நாம் புரிந்துகொள்ள உதவுவதற்கு வேதாகமத்தில் இருந்து பிற கூற்றுக்கள் தேவைப்படுகின்றன.

ரோமர் 16:1ல் பெபேயாளைக் குறிப்பதற்கு *diakonon*[1] உதவிக்காரி (தமிழில் “ஊழியக்காரி”) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டதற்கு, மே லான்மை செய்யும் கண்காணிப்பு அல்லது மேய்ப்பு என்பது நோக்கமா யிருக்கவில்லை, ஏனென்றால் இந்தப் பொறுப்பு சபையின் மூப்பர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருந்தது (நடபடிகள் 20:28; 1 பேதுரு 5:1, 2); இது சபைக்குழுமத்திற்காக முடிவெடுத்தல் என்பதை உள்ளடக்குவதும் இல்லை. மேய்ப்பர்கள் - தேவனால் நியமிக்கப்பட்ட கண்காணிகள் (மூப்பர்கள், ஆயர்கள் மற்றும் பாஸ்டர்கள் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்) - சபையாகிய மந்தையை நடத்திச்செல்ல வேண்டியவர்களாய் இருந்தனர். மேய்ப்பர்களாக அவர்கள் பணியாற்றுகின்றபோது, ஆடுகளுக்காகவும் அவர்களின் நலனுக்காகவும், அவர்கள் (மேய்ப்பர்கள்) முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாயிருந்தனர். ஆடுகளுக்காக மேய்ப்பர்களே முடிவெடுத்து வழிநடத்தவேண்டுமேயொழிய இது எதிர்விதமாக இருப்பதில்லை. அவர்கள் மந்தையின் முன்னால் செல்லவேண்டியவர்களாக இருந்தனர், மற்றும் பிரதான மேய்ப்பரின் சித்தத்திற்கு இணங்க, திசையைத் தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாய் இருந்தனர் (1 பேதுரு 5:4). இந்தப்பொறுப்பு, ஒவ்வொரு மூப்பரும் ஒரே மனைவியையுடைய புருஷராய் இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 3:2) என்ற உண்மையின் அடிப்படையில், ஆண்களுக்கே தரப்பட்டிருந்தது என்பது தெளிவு.

“மூப்பர்,” “அப்போஸ்தலர்” மற்றும் பிற வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்றே *diakonos* என்ற வார்த்தையும், தொழில்ரீதியான மற்றும் தொழில்ரீதியற்ற என்ற இரு வகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது புதிய ஏற்பாட்டில் மூன்றுமுறை மாத்திரம், உதவிக்காரர் என்ற குறிப்பிட்ட பணிநிலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:8,

*12). ரோமர் 16:1ல் ஒரு பணிநிலை அர்த்தப்படுத்தப்பட்டது என்று வைத்துக்கொள்வோமானால், அதிகபட்சமாக, இவ்வார்த்தை நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது; இல்லையென்றால், இவ்வசனம் "ஊழியம்" என்று தொழில்ரீதியற்ற வகையில் இச்சொல்லைப் பயன்படுத்தும் இருபத்தியேழு முறைகளில் ஒன்றாக உள்ளது. இதன் வினைச்சொல் வடிவமான diakoneo என்பது "ஊழியம் செய்ய" அல்லது "சேவகம் செய்ய" என்று அர்த்தப்படுகிறது, இது முப்பத்தியாறு முறைகள் (புதிய ஏற்பாட்டில்) உள்ளது, அவற்றில் இரு இடங்களில் இது உதவிக்காரரின் பதவிநிலைக்குப் பயன்படுத்தப்படுகிறது. பெபேயாள் ஒரு உதவிக்காரியாக (தமிழ் வேதாகமத்தில் "ஊழியக்காரியாக") இருந்தாள் என்பதற்கான குறிப்பானது, இனியும் பவுல் (எபேசியர் 3:7; கொலோசெயர் 1:23, 25), தீகிக்கு (எபேசியர் 6:21; கொலோசெயர் 4:7), எப்பாப்பிரா (கொலோசெயர் 1:7) மற்றும் தீமோத்தேயு (1 தெசலோனிக்கேயர் 3:2; 1 தீமோத்தேயு 4:6) ஆகியோருக்கு அந்தக் குறிப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது போல் அவள் ஒரு பதவிநிலையைக்கொண்டிருந்தாள் என்று நிரூபிப்பதில்லை.*

*Diakonos, அதாவது "உதவிக்காரர்கள்" என்பவர்கள் கண்காணிகள் அல்லது ஆயர்களுடைய பணிநிலையுடன் இணைந்து குறிப்பிடப்படுகின்றனர் என்ற உண்மையானது (பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:1, 8), அவர்களின் பொறுப்புகள், கண்காணிகளுடையவை போலிருந்ததில்லை என்று அர்த்தப்பட வேண்டும். அதுபோன்றே, "இன்னொருவரின் அதிகாரத்துவத்தின்கீழ் தனிப்பட்ட ஊழியம்" என்ற இவ்வார்த்தையினுடைய அர்த்தமானது, இந்தப் பதவியின் பொறுப்பு என்பது கண்காணிகளால் இவர்களுக்கு நியமிக்கப்படும் ஊழியத்தை உள்ளடக்கியிருந்தது. ஏனெனில், இந்தப் பதவியில் இருந்து பணியாற்றுபவர்களின் தகுதிகள் (1 தீமோத்தேயு 3:8-13) மரியாதைக்குரிய, அர்ப்பணிப்புடைய மற்றும் திறமையான ஆண்களாய் இருந்தனரென்று மறைமுகமாய் உணர்த்தப்பட்டிருந்தது.*

*பந்திவிசாரணை செய்வதற்கென்று தேர்ந்துகொள்ளப்பட்ட ஏழு ஆண்களும் (நடபடிகள் 6:1-6), உதவிக்காரர்கள் என்ற பதவிபொறுப்பைக் கொண்டிருந்து இருக்கமாட்டார்கள், அவர்களின் வேலையை விவரிக்க பயன்படுத்தப்பட்ட பெண்மைத்துவம் கொண்ட diakonia என்ற வார்த்தையானது, ஒரே வேர்வார்த்தையில் இருந்து வருவதாய் உள்ளது. இங்கு உதவிக்காரர் என்பவரது பணிநிலையைக் குறித்தல் என்ற நோக்கம் இருந்ததென்றால், இந்தப்பணிநிலை பற்றிக்குறிப்பிடப்படும் மற்ற எல்லா இடங்களிலும் உள்ளதுபோல, ஆண்மைத்துவம் கொண்ட diakonos என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு இருக்கலாம்.*

*Diakonos என்ற வார்த்தை, உதவிக்காரரின் பணிநிலைக்குப் பயன்படுத்தப்படாதபோது, இது ஒருவர் இன்னொருவரின் அதிகாரத்துவத்தின்கீழ் ஊழியம் செய்தலை அர்த்தப்படுத்துகிறது. இந்தக் காரணத்தினால், சந்தர்ப்பப்பொருளானது உதவிக்காரரின் பணிநிலையினுடைய அர்த்தத்தை வேண்டிக்கேட்காத வேளையில், அதன் பயன்பாடானது தொழில்ரீதியற்ற வகையில் உள்ளது என்றே கருதப்படவேண்டும்.*

*இதுவே ரோமர் 16:1ல் பெபேயாளைக் குறிப்பிடும் வகையில்*

காணப்படும் *diakonon* என்ற வார்த்தையின் பிரச்சனையாக உள்ளது. இந்த வார்த்தையின் சந்தர்ப்பப்பொருளில் இருந்து, இது தொழில் ரீதியானதாக பயன்படுத்தப்பட்டதா அல்லது தொழில்ரீதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டதா என்று நாம் தீர்மானிக்க முடியாது. இவ்வசனப் பகுதியில் இதன் பயன்பாடு பற்றிய ஒரு யூகம் இன்னொரு யூகத்தைப் போலவே நல்லதாக உள்ளது. சிலர் "succorer" (KJV) அல்லது "helper" (NASB) அல்லது (தமிழில் "ஊழியக்காரி") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *prostatis* (ரோமர் 16:2) என்ற வார்த்தையானது, அவள் கண்காணிப்புப் பணியில் ஊழியம் செய்தாள் என்று மறைமுகமாய்க் குறிப்பிடுவதாக நினைக்கின்றனர். *Prostatis* என்ற வார்த்தையானது, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுவதால், இவ்வார்த்தையின் அர்த்தத்தைத் தீர்மானிப்பதில் உதவுவதற்குப் புதிய ஏற்பாட்டின் சந்தர்ப்பப்பொருள் எதுவும் நமக்கிருப்பதில்லை. உலகப்பிரகாரமான பயன்பாடு முடிவுதர இயலாததாக உள்ளது, ஏனெனில் அதில் இவ்வார்த்தை, "ஆட்சி செய்தல்" மற்றும் "ஆளுகை செய்தல்" என்ற வகையில் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் மிகவும் அடிக்கடி இது "புரவலம்" மற்றும் "சேவை" என்பவற்றின் தொடர்பாகப் பயன்படுத்தப்படுகிறது. *Prostatis* என்ற வார்த்தை ஏறக்குறைய உலகளாவிய வகையில், "ஆட்சியாளர்" அல்லது "மேலாளர்" என்று மொழிபெயர்க்கப்படுவதற்குப் பதிலாக, "உதவியாளர்" அல்லது இவ்வசனப்பகுதியில் உள்ள அதற்குச் சமமான வார்த்தையாக மொழிபெயர்க்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கலாம்.

பெபேயாள் ஒரு *prostatis* ஆக, அதாவது "அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்" என்று பவுல் உரைத்தார் (ரோமர் 16:2). *Prostatis* என்பது "ஆட்சி செய்பவள்" அல்லது "ஆளும் பெண்" என்று அர்த்தப்படுகிறது என்றால், அவள் பவுலின்மீது ஆளுகை செய்தாள் என்றாகிறது, இது ஒரு சிலர் தரும் குறிப்பாகும். "புரவல உதவியாள்" என்பதன் அர்த்தம் அடிக்கடி இவ்வார்த்தையில் அடங்கியுள்ளது, இது அவள் பவுலுடனும் மற்ற பலருடனும் கொண்டிருந்த உறவுமுறைக்கு மிகப்பொருத்தமானதாக இருக்கிறது. பெபேயாள், சபையில் ஒரு பதவியைக் கொண்டிருந்தாள் என்று நிரூபிப்பதற்குப் போதுமான ஒரு ஆதாரம் இல்லை. ஒரு விஷயத்தை நிரூபிக்க, போதுமான அளவுக்குச் சந்தர்ப்பப்பொருள் இல்லாத ஒரு வசனப்பகுதியைப் பயன்படுத்தி உபதேச விஷயங்களை முடிவுசெய்யக்கூடாது.

பெபேயாளின் பணிப்பொறுப்பைத் தீர்மானிப்பதற்கு வேதாகமத்தின் பரவலான சந்தர்ப்பப்பொருள் உதவுகிறதா? சிலர், தொடக்ககால சபையானது, உதவிக்காரிகள் என்ற பதவியைக் கொண்டிருந்தது என்று நிரூபிப்பதற்கு 1 தீமோத்தேயு 3:11ஐப் பயன்படுத்துகின்றனர். உதவிக்காரி என்ற பதவி இருந்ததால், பெபேயாள் அப்படிப்பட்ட பதவியை வகித்திருக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். தொடக்ககால சபையில் உதவிக்காரிகள் இருந்தனர் என்பதற்கான நிரூபணமானது, அவள் ஒரு உதவிக்காரியாக இருந்ததற்கான சாத்தியக்கூற்றிற்குக்

கதவுகளைத் திறக்கலாம், ஆனால் அவள் நேர்மறையான அர்த்தத்தில் உதவிக்காரியாக இருந்தாள் என்று அது நிரூபிக்காது. 1 தீமோத்தேயு 3:11ல் இருந்து வழக்கிட இயலாத முடிவைத் தரவழைப்பதற்கு, அவ்வசனம் பற்றிப் போதிய கேள்விகள் எழும்புகின்றன. "மனைவியர்" அல்லது "ஸ்திரீகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *gune* என்ற வார்த்தை, உதவிக்காரர்கள் மற்றும்/அல்லது மூப்பர்களின் மனைவியரையோ அல்லது உதவிக்காரிகளையோ குறிப்பிடக்கூடும். உதவிக்காரிகள் என்பது போன்ற பதவிகளில் பெண்கள் பணியாற்றினர் என்று புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் குறிப்பிடப்படுவதில்லை என்ற உண்மையும்கூட, பெபேயாள் ஒரு உதவிக்காரியாக இருந்தாள் என்றும் தொடக்ககால சபையில் உதவிக்காரிகள் என்ற பதவி இருந்தது என்றும் நாம் போதகரீதியாகக் கூறுவது பற்றி எச்சரிக்கையாய் இருக்கவும் அதைத் தவிர்க்கவும் காரண மாக வேண்டும்.

உதவிக்காரி என்ற பதவி இருந்தது என்று நம்மால் நிலைநாட்ட முடிந்தாலும்கூட, தொடக்ககால சபையில் பெண்கள் கண்காணிகளாக ஊழியம் செய்தனர் என்று அது நிரூபிக்காது. அப்படிப்பட்ட சாட்சிய மானது, அவர்கள் செய்ததாகச் சில மனிதர்கள் யூகிக்கின்ற மற்ற எல்லா விஷயங்களையும் உறுதிப்படுத்தவதோ அல்லது இன்றைய நாட்களில் சிலர் பெண்களின் பணிப்பொறுப்புகளில் அனுமதிக்கின்ற செயல்முறைகள் யாவற்றையும் உயர்த்திப்பிடிப்பதோ இல்லை. புதிய ஏற்பாட்டில் கிடைக்கப்பெறுகிற தகவல்கள் யாவும் உதவிக்காரர் என்ற பதவியானது அவ்வார்த்தையின் அர்த்தத்தின்படியே, மற்றவர்களால் உதவிக்காரர்களுக்கு நியமிக்கப்பட்ட பொறுப்புக்களைச் செயல் படுத்தும் பொறுப்பை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. *Diakonos* என்ற வார்த்தையானது, அரசரின் கட்டளைகளைச் செயல்படுத்துகிற வேலைக்காரர்களுக்கும் (மத்தேயு 22:13), இயேசுவின் அறிவுறுத்துதலைப் பின்பற்றும்படி மரியாள் யோவான் 2:5, 9ல் கூறிய வேலைக்காரர்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. *Diakonos* என்ற வார்த்தையானது, இயேசுவின் சித்தத்திற்குப் பதில்செயல் செய்யும் மக்களுக்கும் (யோவான் 12:26) தேவனு டைய சித்தத்தின் முகவர்களாகச் செயல்படும் அரசு அதிகாரிகளுக்கும் (ரோமர் 13:4) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது புதிய உடன்படிக்கையின் போதகர்களாயிருந்து இயேசுவின் சித்தத்தை நிறைவேற்றிய அப்போஸ்தலர்களுக்கும் (2 கொரிந்தியர் 3:6; 6:4), சாத்தானுடைய செய்தியாளர்களான கள்ளப்போதகர்களுக்கும் (2 கொரிந்தியர் 11:15), இயேசு விரும்பியவாறு அவருடைய செய்தியைப் போதித்த பவுலுக்கும் (1 கொரிந்தியர் 3:5; 11:23; எபேசியர் 3:7; கொலோசெயர் 1:23, 25) பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு *diakonos* என்பவர் அதிகாரத்தில் உள்ளவர்களுடைய கட்டளையைச் செயல்படுத்துபவராய் இருந்தார். அவர் கட்டளையிடுகின்ற அல்லது முடிவெடுக்கின்ற நிலையில் இருந்ததில்லை. பெபேயாள் ஒரு உதவிக்காரியாக இருந்திருந்தால், கெங்கிரேயாவில் இருந்த சபையில் அவள் அதிகாரமுள்ள பதவி எதையும் வகித்திருந்ததில்லை. அவள் ஒரு

"உதவிக்காரியாக" இருந்திருந்தாலும் இல்லையென்றாலும், அவள் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவராக மற்றவர்களுக்குக் கீழ் ஊழியம் செய்து அவர்களின் முடிவுகளைச் செயல்படுத்தியவளாக இருந்தாள்.

---

குறிப்பு

[1]"ஊழியர்" மற்றும் "ஊழியக்காரி" என்று இங்கு பயன்படுத்தப்பட்டிருப்பது போல் (ரோமர் 16:1) மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, வேர் வினைச்சொல்லான *diakoneo* விலிருந்து வருகிறது. "ஊழியம் என்பதற்கான இந்த வார்த்தை, *douleuo* (அடிமையாக ஊழியம் செய்ய), *therapeauo* (விருப்பமுடன் ஊழியம் செய்ய), *latreuo* (கூலிக்காக ஊழியம் செய்ய), மற்றும் *leitourgeo* (பொது ஊழியம் செய்ய) ஆகியவற்றிலிருந்து விசேஷித்ததாக, தனிப்பட்ட ஊழியத்தின் அடிப்படை வித்தியாசத்தைக் கொண்டுள்ளது." H. W. Beyer, *"diakonos,"* in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Fredrich, trans. and abr. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 152.

---

## வேதாகமத்தில் குறிப்பிடத்தக்க பெண்கள்

வேதாகமத்தில், மாண்புமிக்க, தனிச்சிறப்பு வாய்ந்த மற்றும் ஞானமுள்ள பல பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். நாம், அபிகாயிலின் கணவனான நாபால் என்பவனின் இழிகுணமுள்ள, கீழ்த்தரமான செயல்பாட்டிற்கு நேரெதிரான வகையில், அவளது ஞானம் மற்றும் நெறிமுறை பற்றி வாசிக்கின்றோம் (1 சாமுவேல் 25:2-42). அவளிடத்தில் தாவீது, "உன்னை இன்றையதினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வாராதபடிக்கும், என் கையே பழிவாங்காதபடிக்கும், நீ இன்றையதினம் எனக்குத் தடைபண்ணினபடியினால், நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக" என்று கூறிப் பாராட்டினார் (வசனங்கள் 32, 33). மேலும், வேதவசனமானது, தாமாரின் குற்றம் அறியாத தூய்மை பற்றியும் அவளது சகோதரன் அம்னோனின் சுயநலமான காம இச்சை பற்றியும்கூடச் சித்தரிக்கிறது (2 சாமுவேல் 13:1-19). ஒரு நல்ல மற்றும் புத்திசாலியான பெண் மற்றும் மதியீனமான, தேவபக்தியற்ற ஆண் ஆகியோருக்கிடையில் உள்ள நேர்மாறு வேறு எவ்விதத்தில் சிறப்பாய்க் காண்பிக்கப்பட முடியும்?

அப்சலோமின் சார்பாகத் தாவீது அரசரிடத்தில் வேண்டுகோள் விடுப்பதற்கு யாரேனும் ஒருவர் தேவைப்பட்டபோது, யோவாப் ஒரு ஆணையல்ல, ஆனால் தெக்கோவூரில் இருந்த ஞானமுள்ள பெண் ஒருத்தியையே தேர்ந்தெடுத்தார் (2 சாமுவேல் 14:1-20). அதுபோன்றே, சாலொமோனின் சார்பாக பேசுவதற்கு நாத்தான் என்பவரால், பத்சேபாள் [என்ற பெண்தான்] அனுப்பப்பட்டாள் (1 இராஜாக்கள் 1:11-31).

வேதாகமத்தில் பெண்களின் செல்வாக்கு நல்ல மற்றும் மோசமான

*என்ற இரண்டு விளைவுகளையும் கொண்டிருந்தது. அத்தாலியாள் என்ற கொடுங்குணம் கொண்ட பெண் அரியணையில் தான் ஆளுவதற்கு அச்சுறுத்தலாயிருந்த யாவரையும் கொலைசெய்யத்தேடியபோது, யோசேபாள் என்பவள் யோவாஸ் என்ற இராஜாகுமாரனையும் அவன் தாதியையும் பள்ளி அறையில், அவன் யூதாவை ஆட்சிசெய்யும் வரையில் ஒளித்துவைத்தாள் (2 இராஜாக்கள் 11:1-3). துன்மார்க்கனான ஆமானால் திட்டமிடப்பட்ட அழிவில் இருந்து இஸ்ரவேல் மக்களைக் காப்பாற்றுவதற்குத் தேவன், அழகும் பலமும் கொண்ட பெண்ணான எஸ்தர் ராஜாத்தியைப் பயன்படுத்தினார் (எஸ்தர் 4-8).*

*ஒரு பெண்ணினால்தான் சிம்சோனின் வீழ்ச்சி ஏற்பட்டது (நியாயாதிபதிகள் 14-16). சாலொமோன் பெண்களினால் மோசமான விதமாய்ப் பாதிக்கப்பட்டார் (1 இராஜாக்கள் 11:1-4). பத்சேபாளின் அழகுமிக்க உடலினால் காம இச்சைக்கும், விபசாரம் செய்வதற்கும், கொலை செய்விப்பதற்கும் தாவீது தூண்டப்பட்டார் (2 சாமுவேல் 11:2-27). ஆகாப் என்ற அரசனுக்கு அழிவை ஏற்படுத்துவதில் யேசபேல் என்ற பெண் உதவிசெய்தாள் (1 இராஜாக்கள் 21:1-26).*

*பெயர் தெரியாத ஒரு பெண், எருசலேமுக்குத் தாவீது அனுப்பிய ஒற்றர்களின் உயிரைக் காப்பாற்றினாள் (2 சாமுவேல் 17:17-21). இன்னொரு ஞானமுள்ள ஆனால் பெயர் தெரியாத பெண், ஒரு நகரத்தில் குடியிருந்தவர்களை, சேபாவின் தலையைத் துண்டித்து நகரத்தின் மதிலுக்கு வெளியே யோவாபினிடத்தில் தூக்கியெறியும்படித் தூண்டியபோது, யோவாப் அந்த நகரத்தை அழிப்பதில் இருந்து தடுத்தாள் (2 சாமுவேல் 20:16-22). இவ்வாறு அவள் தாவீதுக்கு எதிராக எழுந்த ஒரு கலகத்தை முடிவுக்குக் கொண்டுவர உதவினாள்.*

*பல பெண்கள் மற்றவர்களுக்குப் பணிசெய்ததன்மூலம் தேவனுக்கு மாபெரும் ஊழியக்காரிகளாக இருந்துள்ளனர். ஒரு பெண், எலியாவைப் போஷித்தாள் (1 இராஜாக்கள் 17:9-15). கீர்த்திவாய்ந்த ஒரு பெண், எலிசாவுக்கு உணவும் அறைவீடும் அளித்தாள் (2 இராஜாக்கள் 4:8-10). பல்வேறு பெண்கள் தங்கள் சொந்தப்பொருட்களில் இருந்து எடுத்து, இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் தேவைகளை நிறைவேற்றினர் (லூக்கா 8:1-3; மத்தேயு 27:55; மாற்கு 15:41); அவர்களில் மார்த்தாளும் மரியாளும் இருந்தனர் (லூக்கா 10:38-42; யோவான் 12:2). பெயர் அறியப்படாத சமாரியப்பெண் ஒருத்தி, யாக்கோபின் கிணற்றண்டையில், உண்மையான ஆராதனை பற்றிய மாபெரும் பாடம் ஒன்றைப் பெற்றுக்கொண்டாள், மற்றும் அவள் அந்த நகரத்தார் யாவரையும் இயேசுவின் போதனையைக் கேட்கும்படி அழைத்து வந்தாள் (யோவான் 4:21-42). இயேசுவின் மரணத்திற்கு முன்பு ஒரு பெண் அவரை அபிஷேகித்தாள் (மத்தேயு 26:7-13). இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது (யோவான் 19:25; லூக்கா 23:49) அவரைப் பின்பற்றிய ஆண்கள் அவரைக் கைவிட்டுச் சென்றிருந்த வேளையில் - அவரது தாய் உட்பட - பல பெண்கள் தைரியமாய் அவரண்டையில் நின்றிருந்தனர். இயேசுவினால் தேர்ந்து கொள்ளப்பட்டிருந்த*

அப்போஸ்தலர்கள்கூட, ஆயுதம் தாங்கிய கும்பல் அவரைக் கைது செய்தபோது, தங்கள் உயிருக்குப் பயந்து ஓடிவிட்டனர் (மத்தேயு 26:56).

மேலே குறிப்பிடப்பட்டவர்கள் போல், ஒழுக்க நெறியும் அர்ப்பணிப்பும் கொண்ட மாண்புமிகுந்த பெண்கள் நீதிமொழிகள் 31:10-31ல் விவரிக்கப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட பண்புகளைக் கொண்ட பெண்கள் தேவனுக்கு மாபெரும் ஊழியக்காரிகளாக நிலைநின்றனர். அவர்கள் கர்த்தத்துவத்தில் அல்ல ஆனால் ஊழியத்திலேயே தங்கள் மாபெரும் தன்மையைக் கண்டறிந்தனர். அவர்களின் ஊழியத்தின்மூலம் அவர்கள், பெரும்பாலான ஆட்சியாளர்கள், அரசர்கள், அதிபதிகள் மற்றும் இளவரசர்களைக் காட்டிலும் உயர்ந்து நின்றனர். அவர்கள் மாபெரும் நபர்களில் இருப்பவர்களாக (மத்தேயு 20:25-28), யோவான் ஸ்நானனின் தரத்திற்கு உயர்ந்திருப்பவர்களாக (மத்தேயு 11:11) மற்றும் ஓரளவுக்கு இயேசுவைப் போலுள்ள நிலையை அடைந்திருப்பவர்களாக (மத்தேயு 20:28) கருதப்பட வேண்டும்.

பெண்களும் ஆண்களும் இயேசுவின் போதனையில் உள்ள உவமேயத்தை உணர்ந்தறிவார்கள் என்றால், ஒரு ஊழியக்காரராயிருத்தல் என்பது ஆண்டவராயிருத்தல் என்பதற்கு ஒருபடி கீழே செல்லுதல் அல்ல, ஆனால் ஒருபடி மேலே செல்லுதல் என்று உணர்ந்தறிவார்கள். உதவிகரமான ஊழியனாக வாழுதல் என்பதே எல்லாருடைய இலக்காகவும் இருக்க வேண்டும். இருப்பினும், சிலருடைய கண்களில் [பார்வையில்], வேதாகமத்தில் உள்ள பெண்கள், வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோரைப்போல் பெரியவர்களாகக் காணப்படாதிருக்கலாம், ஆனால் அவர்களின் மாபெரும் தன்மை என்பது அவர்களின் நற்செயல்களின் விளைவுகளிலேயே காணப்பட முடியும். இப்படிப்பட்ட பல பெண்களைக் கர்த்தர் நமக்கு அருளுவாராக.

இயேசுவின் தாயான மரியாள், மாபெரும் பெண்ணிற்கு ஒரு உதாரணமாக இருக்கின்றாள். அவள் தேவனுக்கென்று தாழ்மையான ஊழியத்தில் தன்னையே அர்ப்பணிக்க மனவிருப்பமாய் இருந்தாள். அவளது உடலானது கிறிஸ்து இவ்வுலகில் வருவதற்குரிய பாத்திரமாகப் பயன்படுத்தப்படும் என்று தூதன் அவளுக்கு அறிவித்தபோது, அவள் தன்னடக்கத்துடன், “இதோ, ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது” என்று பதில் அளித்தாள் (லூக்கா 1:38).

இயேசு தமது சிறு வயது பிராயத்தில், தனது தாயாகிய இந்தப் பெண்ணுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்: அவர் மரியாளுக்கும் யோசேப்புக்கும் கீழ்ப்படிந்திருந்தார். “பின்பு அவர், அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்; ...” (லூக்கா 2:51). அவர், தமது உட்கண்ணோக்குகள், திறமைகள் அல்லது மற்ற வல்லமைகள் அவர்களுடையவற்றைப் பார்க்கிலும் தாழ்ந்திருந்தன என்பதற்காக அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கவில்லை. அவர்மீது அவர்கள் அவரது தாய் மற்றும் தகப்பன் என்ற வகையில் கொண்டிருந்த

*அதிகாரத்துவ நிலையினிமித்தமே அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். கீழ்ப்படிதல் என்பது தாழ்ந்திருத்தல் என்று அர்த்தப்படுவதில்லை.*

*ஏறக்குறைய பதினெட்டு ஆண்டுகளுக்குப்பின்பு அவர் தமது தாயின் அங்கீகாரத்துடன், அதிகாரத்துவத்தில் தமது நிலைப்பாட்டிற்குள் அடியெடுத்து வைத்து, நடத்துவப் பணிப்பொறுப்பை மேற்கொண்டார். கானாவூரில் நடைபெற்ற ஒரு திருமணவிருந்தில், திருமணவீட்டாரிடத்தில் திராட்சரசம் இல்லை என்று மரியாள் இயேசுவிடம் தகவல் தெரிவித்தாள். அதற்கு அவர், "ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன? என் வேளை இன்னும் வரவில்லை" என்று பதில் அளித்தார் (யோவான் 2:4;* NKJV). *பின்பு அவள், வேலைக்காரர்களிடத்தில் "... அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" என்று கூறினார் (யோவான் 2:5). இந்தப் பிரச்சனைக்கான தீர்வை இயேசுவின் கரங்களில் ஒப்புவித்தாள். அதுமுதல் இயேசு, தமது தாயுடன் தாம் கொண்டிருந்த உறவுமுறையில் அதிகாரத்துவத்தின் நிலைப்பாட்டைத் தக்கவைத்துக்கொண்டார்.*

*மரியாளை ஆண்டவருக்கு ஒரு மாபெரும் ஊழியக்காரியென்று கருதுகையில், நமது மீட்பர் அவளது உடல்மூலமாக, அதாவது ஒரு பெண்ணின் உடல் மூலமாக (கலாத்தியர் 4:4). இவ்வுலகில் பிரவேசித்திருப்பினும், அவர் ஒரு ஆணின் உடலெடுத்தே வந்தார் என்ற உண்மையை நாம் பார்வையில் இருந்து தவறவிடக்கூடாது. தேவன் ஒரு ஆண் அல்ல, ஆனால் அவர் பூமியின் மக்களுக்குத் தம்மையே வெளிப்படுத்துவதற்கும் (யோவான் 1:18) உலகத்தின் பாவங்களுக்குப் பலிசெலுத்துவதற்கும் (எபிரெயர் 10:5, 10). ஒரு ஆணின் உடலை, இயேசுவின் உடலைத் தேர்ந்துகொண்டார்.*